செய்தி வெளியீடு எண்:1392 நாள்:22.12.2021

**இந்திய நாட்டிய விழா – 2021–2022, மாமல்லபுரம்**

**தொடக்க விழா நாள்.23.12.2021**

தமிழ்நாடு சுற்றுலாத் துறையின் சார்பில் செங்கல்பட்டு மாவட்டம், மாமல்லபுரத்தில் இந்திய நாட்டிய விழா இந்த ஆண்டு நாளை (23.12.2021) கோலாகலமாக தொடங்கவுள்ளது. இந்த விழாவினை மாண்புமிகு குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் திரு. தா.மோ.அன்பரசன் மற்றும் மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் டாக்டர். மா.மதிவேந்தன் ஆகியோர் தொடங்கி வைக்கிறார்கள். மேலும், இவ்விழாவில் நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள் பங்கேற்க உள்ளார்கள். இவ்வாண்டு இந்திய நாட்டிய விழா நாளை (23.12.2021) மாமல்லபுரம் கடற்கரை கோயில் வளாகத்தில் தொடங்கி 23.01.2022 வரை நடைபெறும். இந்நாட்டிய விழாவினை சுற்றுலாப் பயணிகள் ஒவ்வொரு ஆண்டும் தொடர்ந்து வந்து கண்டுகளித்து வருகின்றனர்.

இந்திய கலாச்சார சுற்றுலா விழாவினை சுற்றுலாப் பயணிகள் ஒரே மேடையில் கண்டுகளிக்கும் வண்ணம் பல்வேறு மாநிலங்களின் நடன வடிவங்கள் மற்றும் கிராமியக் கலை நிகழ்ச்சிகள் காட்சிப் படுத்தப்படுகின்றன. நாளை (23.12.2021) தொடங்கும் இந்திய நாட்டிய விழாவில் 90க்கும் மேற்பட்ட பல்வேறு நிகழ்ச்சிகள் 23.01.2022 வரை நடைபெற உள்ளன. இதில் தமிழகத்தின் பண்பாட்டை வெளிப்படுத்தும் பல்வேறு கிராமியக் கலை வடிவங்கள் மற்றும் பிற மாநில நடன நிகழ்ச்சிகளும் இடம் பெறுகின்றன.

மேலும், இக்கலை நிகழ்ச்சிகள் கொரோனா தடுப்பு விழப்புணர்வு விதிமுறைகளை பின்பற்றி நடத்தப்படும். சுற்றுலா பயணிகளும் பின்பற்ற அறிவுறுத்தப்படும்.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**